346

✠

# A Lyrical Address
on the story of
# Martha and Mary
of
## Bethany

by

The Rved. P. S. PETER
*Idaiyangudi.*

---

பெத்தனி

# "மாத்தாள் மரியாள்"

சரித்திர கவிப்பிரசங்கம்.

இது

இடையன்குடி எஸ். பி. ஜி. மிஷன்
கனம் பி. எஸ். பீற்றர் ஐயரவர்களால்

இயற்றப்பட்டு

பாளையங்கோட்டை
...அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1920

...gistered Copy Right.

Q6
N20
225296

# முகவுரை

பெத்தானியாவூர் மாது சிரோமணிகளாகிய மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சரித்திரத்தின் மேல் செய்யப்பட்டிருக்கிற இந்த கவிப்பிரசங்கமானது இதைப்படிப்பவருக்கும் படிக்கக் கேட்போருக்கும் சிறந்த போதனைகளை விளக்கிக் காட்டக்கூடியதாயிருக்கிறது. ஆவிக்குரிய உள்ளான ஜீவனை ஒருவாறு முற்றிலும் அலட்சியம் பண்ணிவிட்டு பக்திக்குரிய பிரயோஜனமான வேலைகளிலும் பரோபகார கிரியைகளிலும் மாத்திரம் அதிக முயற்சியாயிருக்கிற அநேக உத்தமகிறிஸ்தவர்கள் மார்த்தாளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். மார்த்தாள் மரியாளாகிய இருபேரும் கிறிஸ்துவுக்குஉத்தம சிஷர்களேயல்லாது சிலர் சொல்லுகிறபடி மார்த்தாள் உலகத்திற்கும் மரியாள் திருச்சபைக்கும் முன்னடையாளமானவர்களல்ல. இவர்கள் ஒன்றுபோல இயேசு ரட்சகரால் நேசிக்கப்பட்டார்கள். (யோ. 11: 5.) ஆகவே, இயேசுரட்சகரை நேசித்தும் அவரால் நேசிக்கப்பட்டும் இருக்கிற குடும்பங்களிலும் மார்த்தாள் மாரியாளைப்போன்ற ஆத்துமாக்கள் இருக்கக் கூடியதுதான். ஆகிலும் மரியாளைப்போல அமரிக்கையாய் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்திருந்து அவருடைய நற்போதனைகளையும் அமிர்தவசனங்களையும் கேட்டு சிந்தித்து பரவசமடைந்திருப்பதுதான் அவருக்குப் பிரியமான காரியம். இதைக்குறித்துத்தான் ரட்சகர் “தேவையானது ஒன்றே; மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத்தெரிந்து கொண்டாள்” என்று மார்த்தாளைப்பார்த்து சொல்லுகிறார். ஆகையால் அருமையான கிறிஸ்தவ சகோதரரே! நாம்

மரியாளைப்போலி . நமது தேவதா பக்தியையும் மார்க்க அங்காசார்ங்களையும் பரோபகார செய்கைகளை யும் கிறிஸ்துமார்க்க வைராக்கியத்தையும் பலரறிய காண்பிக்கிறவர்களாய் மாத்திரம் இருப்பது போதாது. ஆனால் மரியாளைப்போல "அழியாத அலங்கரிப்பாயி ருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருத யத்தில் மறைந்திருக்கிற குணவலங்கார முடையவர் களாயும்" (1 பேதுரு. 3: 4), "கர்த்தர் என் சுதந்தர மும் என் பாத்திரத்தின் பங்குமானவர்" (சங். 16: 5.) என்று சங்கீதக்காரனைப்போல அகமகிழ்ந்து அறிக் கையிடுகிறவர்களாகவும், "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக் கிறேன்". என்று ஆனந்தத்தோடு சொல்லத்தக்க வர்களாகவும், அவரை நேசித்து சேவித்து அவரை ஏற்றுக்கொண்டு தங்களுக்கு சொந்தமாக்கிக்கொண்ட வர்களாகவும் ஜீவித்துவர வேண்டுமென்ற முதல் முக் கிய போதனை இச்சரித்திரத்திலடங்கியிருக்கிறது.

மேலும் இச்சரித்திரத்தை கவிகளோடு வசன முறையும் கலந்து அச்சிட்டிருப்பது அனேக கனப்பிர சங்கிகள் மிஷன் ஆசாமிகளுடைய கேட்டுக்கொள்ளு தலுக்கு இணங்கியும் வாசிக்கப்படித்தவர்கள் தாங் களே படித்து இப்புஸ்தகத்திலடங்கிய பொருள்களை யும் போதனைகளையும் கற்றுக்கொள்ளச்செய்யும் நோக் கமாகவுமே. இது அனேக ஆத்துமாக்களுக்குப் பிர யோஜனமாயிருக்கத் திரியேக தேவனருள் புரிவாராக.

*Idaiyangudi,*
*21 st May 1920.*

**P. S. Peter.**

### நேரிசை வெண்பா.

மாது சிரோமணிகள் மார்த்தாள் மரியாளின்
காதல் மிகுசரிதையைக்கவியாய்—ஓதி
மனப்பக்தமே தமக்கெப்போதும் வேண்டு
மெனப்போதித் தாரேசென்பேன்.

### நேரிசை வெண்பா.

குருவேசு பாதப் படிதங்கி தங்கை
பெரும்பங்கு பெற்றுமகிழ்ந்தாள்—வெறும்பங்கு
அக்காளடைந்தாள் அவள்மதி யீனத்தால்
எக்காலு மெச்சரிப்பீது.

## அவையடக்கம்.

### நேரிசை வெண்பா.

செவிக்கின்பமான கவிபாடும் ஞான
கவிவாணர் கட்கோர் விண்ணப்பம்—கவியிதில்
கண்ட பிழைவிண்டு நன்று யீதுவென்று
கொண்டு புகழ்வீர் குணம்.

## மன்ருட்டு.

காமவாழி. பல்லவி. ஆதிதாளம்.

1. ஐயா வின் கெழுந்துந்தன்
ஆசிர்வாதம் தா—எசு.

2. துய்யா வெனக்குனது
துணையருள்வாய்— ஐயா.

3. ஆவியின் வரங்களை
அனுக்கிரகிப்பாய்— ஐயா.

4. கேட்டால் கொடுப்போமென்ருய்
கிருபையைத்தா— ஐயா.

5. தட்டு திறப்போமென்ருய்
தயவுசெய்வாய்— ஐயா.

6. படி வுணையழைப்பேன்
பஜனைக்கு வா— ஐயா.

---

# கதை யாரம்பம்.

**இராகம் நாட்டை.** **ஆதிதாளம்.**

1. புலஸ்தீனு தேசத்திலே—யூதே
யாவின் மலைநாட்டு பாகத்திலே
ஒலிவமலைக் கெதிரே—எரி
கோவுக்குப்போகும் ரஸ்தாதனிலே.

2. எருசாலேம் மாநகருக்—குயி
ரண்டு மையில் தூரவெல்லைக்குள்ளே
சிறுவூர் பெத்தானியாவில்—குண
சீல குடும்ப மொன்றுமதிலே.

3. லாசர் என்போனொருவன்—சகோ
தரிகள் மார்த்தாள் மரியாளாம்
நேசமுடன் வசித்து—வந்த
நேர்மையைப் பாவினமாயுரைப்பேன்.

4. சுத்தாவியைக் கெஞ்சுவேன்—அவர்
சொற்சுவை நற்பொருள் தான் தருவார்
மெத்தன சிந்தையுடன் மார்த்தாள்
வீணலுவல்களில் சிக்கிக்கொண்ட.

5. அத்தன்மை போலொழுகா—மரி
யாளெனு முத்தமிபோல் நடந்து
முத்திநெறி புகட்டும்—குரு
முன் திருப்பாதப் படியமர்ந்து.

6. உலகக்கவலை நீக்கி—முழு
உள்ளத்தன்பையவர் மேல் செலுத்தி

நிலையாகக் காத்திருப்போருக்கு
நித்திய ஜீவன் கிடைக்கும் பங்காம்.

பெத்தானியாவென்ற கிராமம் எருசலேம் பட்டணத்துக்கு ஐந்து வயல் அளவு அல்லது அரை நாழிகைவழி தூரமாகவும் ஒலிவமலையின் பக்கமாகவுமிருந்தது. அதற்கு 'ஙிர்ப்பந்த' அல்லது 'வியாகுல வீடு' என்றும் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. அன்றியும் ஒலிவமலையைச் சுற்றிலும் ஈச்சமரங்களும் பனைமரங்களும் மிகுதியாயிருந்தபடியினாலே சிலர் அதற்கு 'ஈச்சமர வீடு' என்றும் 'பனைமரவீடு' என்றும் பெயரிட்டிருந்தார்கள். இயேசுரட்சகர் எருசலேமுக்குட்பிரவேசித்து பவனி போகும்போது அவருடைய சீஷர்கள் அவைகளின் குருத்தோலைகளையே பிடித்துக் கொண்டுபோனார்களாம். இந்த சிறு கிராமத்திலே லாசருவும் அவனுடைய இரண்டு சகோதரிகளும் தங்கள் பெற்றோரை இழந்தவர்களாய் ஒன்றுகூடி வசித்து வந்தார்கள். பருக்கள் நிறைந்தவனாய் ஐசுவரியவானுடைய வீட்டுவாசலருகே கிடந்த லாசரு இவனல்ல. மரித்து நாலுநாளைக்குப் பின் உயிரோடெழுப்பப்பட்ட லாசருவே மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரன்.

---

## மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய வீடு.

### கண்ணிகள்.

1. பக்திமிகுமிச்சிறு குடும்பம் வசிக்கும் [ரும்.
பண்பமைந்த வீட்டை நாம்போய்ப் பார்க்கலாம் வா

2. மச்சுகள் தட்டடிகளுள்ள மாளிகையல்ல
வாசல்கள் மிகுத்தபெரு மண்டபமல்ல.—

3. கண்களைப் பகட்டிடும் கற்கட்டிடமல்ல
கனத்த பருந்தூணமைத்து சமைத்த வீடல்ல.—

4. சரவிளக்கு பவர்விளக்குத் தொங்கும்வீடல்ல
தட்டுமுட்டு சாமான்கள் நிறைந்தவீடல்ல.—

5. தானியதவசம் கொட்டும் பட்டறையில்லை
தனவந்தருக்கேற்ற மெத்தைக் கட்டில்களில்லை.—

6. சாந்தகுணமுள்ளவேழை மூவர்வசிக்கும்
சாமான்யக் குடிசையல்லா லரண்மனையல்ல.—

7. ஜெபதூபமும் துதிகூரலும் சேர்ந்தங்கெழும்பும்
தியானமுமாராதனையுந் தினமுமே தங்கும்.—

8. பரிசுத்த ஜீவியவாசனை யங்குகமழும்
பரமவலங்கார வறிகுறிகளும் தோணும்—

9. இதுவல்லவோ கிறிஸ்தவர்க்கு மாதிரிவீடு
இவைகளில்லா வீடுகெடி வாழ்ந்திடும் காடு.—

அருமையான சகோதரிகளே! மார்த்தாள் மரியாள் என்பவர்களின் வீட்டினலங்காரத்தைச் சொல்லக் கேட்டீர்களே. உங்களிலனேகர் காரைவீடுகளிலும் மெத்தைவீடுகளிலும் ஒட்டடுக்கு வீடுகளிலும் சிலர் ஓலைக்குடிசைகளிலும் வசிக்கிறீர்களே. நீங்கள் வசிக்கும் வீடுகளில் இவ்வித சிறந்த லட்சணங்களுண்டா? பாட்டுகள் படிப்புகள் வேதவாசிப்புகளிருக்கலாம். வேளாவேளைகளில் ஜெபக்கூட்டங்களிருக்கலாம். ஆனால் அங்கே பரிசுத்த ஜீவிய வாசனையுண்டா? பரம

வலங்காரத் தோற்றங்கள் அறிகுறிகளுண்டா? அல்லது வெளிவேஷ பக்திக்குறிப்புகள்தானா? ஐயோ சிலருடைய வீடுகளிலே அசுத்த ஜீவிய துர்க்கந்தம் வீசுகிறதே! பெற்றோர் பிள்ளைகளுடைய துன்மார்க்க ஜீவியத்தை கண்சாடையாய்விட்டு அவைகள் முற்றி வெளியாகி நாற்றமெடுக்கவே அவைகளை மறைக்கப் பிரயாசப்படுகிறார்களே. அவைகளை மூடிப்போட வகை பார்க்கிறார்களே.

---

இராகம் முகாரி — ஆதிதாளம்.

பல்லவி. மூடாதே பாவி மூடாதே—பல
மூடிகளால் பவத்தை மூடாதே.

சில மூடிகளாவன:—

(1) இருள் மூடி.
(2) மறைவு மூடி.
(3) பெலவீன மூடி.
(4) மறதி மூடி.
(5) அறிவீன மூடி.
(6) பிறர் பாவமூடி.

---

இராகம் பைரவி. — ஆதிதாளம்

பல்லவி. மூடாதே மூடாதே—நீ
மூட மூட நாறும் பாவம்.

சங். 38: 5 என் மதிகேட்டினிமித்தம் என் புண்கள் அழுகி நாற்றமெடுத்தது. சங். 31: 10-13. அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று......ஓடிப்போனார்கள்.

---

இராகம் கேதாரம் — ஆதிதாளம்.

பல்லவி.

பரிசுத்தமாய் பரிசுத்தமாய் பரிசுத்தமாய் நீ வசி
பரிசுத்தமாய் நீ வசித்து பரலோகத்திலே சுகி.

எபி. 12: 14. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.

இராகம் மோகனம். ரூபகதாளம்.

பல்லவி.

பரிசுத்த ஜீவியம் பண்ணு—பண்ணா
விலையென்றால் பரத்தில் பங்கிலையென்று எண்ணு.

அநு பல்லவி.

குருசில் தம் ஜீவனைக் கொடுத்துனை மீட்டு
கொண்ட கிறிஸ்துவி லன்பு பாராட்டு—பரிசுத்த.

சகோதரரே! நமது இருதயமாகிய வீடு பரிசுத்த ஜீவிய வாசனை பொருந்தினதாயிருக்கிறதா? அது பரிசுத்த வலங்காரம் பொருந்தினதாயிருக்கிறதா? பரம வலங்கார தோற்றங்களங்கே உண்டா? அல்லது அசுத்த ஜீவிய வாசனையும் பேர்க்கிறிஸ்தவர்களுக்குறிய வெளியலங்காரத் தோற்றங்கள் தானா?

இராகம் ஆகிரி ஆதிதாளம்,

பல்லவி. இருதய சுத்தி
என்பதே பக்தி.

அ-ப. சருவ வல்லகடவுள் திருவடி பணிந்தவர்
சமுகதரிசனை பெற்றிலங்கு நடக்கையுள—

## மார்த்தாள் குணகுணம்.

இராகம் நாத நாமக்கிரியை. ஆதிதாளம்.

பல்லவி. மார்த்தாளைப்பாராய்—அவள் குண
வள்ளலைக்கேளாய்.

அ-ப. பார்த்தால் தயிரியக்காரி பெத்தானியா
பைங்தொடி கட்குள் சிறந்த உபகாரி
வீரியம் பேசிடும் வீட்டுக்கு அலங்காரி
வெடுவெடுப்புடன் மிக சுறு சுறுப்புள்ளவள்
அதிகார சிந்தை பட படப்புள்ளவள்
அறுசுவை சிற்றுண்டி நிமிஷத்திலாக்குவள்
குடு குடு வென்றங் குமிங்குந்திரிபவள்
குறைகூற சருக்கா முற்கோபியுமவளாகும்
பகிரங்க தேவதா பக்திசன் மார்க்கமும்
பார்வைக்குக் காட்டிடும் குருநேசபாசமும்
பற்பல குணசீலக் கற்புமுடையவள்—மார்த்.

---

## மரியாள் குணகுணம்.

இராகம் சங்கராபரணம். ஆதிதாளம்.

பல்லவி. மரியாளைப்பாராய்—அவள் குண
வண்மையைக்கேளாய்.

அ-ப. மரியாளோ சிற்றுண்டி வகையறியாதவள்
வாய்ச்சாலகம் மற்றும் திறமையில்லாதவள்
இருக்குமிடம் தெரியாமலிருப்பவள்
இஷ்டர்களோடு குலாவிக்கொள்ளாதவள்
குடுகுடுவென்றங் குமிங்குமோடாதவள்
குறைகூறி எதிர்வாதம் செய்தறியாதவள்
ரகசிய தேவதா பக்தி தியானமும்
ரபீ உபதேசத்திற் பிரீதியும் ஆவலும்
அவர் பாதத்தண்டையில் சேவிக்கநேசிக்க
அமிர்தமொழி செவியேற்றுக்கவனிக்க
அழியாத போஜனம் கைப்பற்றப்பார்ப்பவள்
— மரி.

மார்த்தாள் மரியாள் இருவரும் பக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்களாயினும் அவர்கள் குணகுணங்களில் வித்தியாசமிருந்தது. அவர்கள் யேசுரட்சகரை நேசித்த விதத்தில் ரட்சகர்தாமே கவனிக்கத்தக்க வித்தியாசம் காணப்பட்டது. அவர்களிருந்த வீட்டில், அவர்கள் நடமாடின விதத்தில், அவர்கள் வாயின் வார்த்தைகளில், அவர்கள் நோக்கம் கவனம் வாஞ்சை முதலானவைகளில் அனந்த வித்தியாசமிருந்தது. இவைகளைக்கொண்டு அவர்கள் குணகுணங்களை வர்ணித்திருக்கிறேன். இப்படியே, பக்தியுள்ள கிறிஸ்தவக்குடும்பங்களில் சில பிள்ளைகள், சில மெம்பர்கள் மற்றவர்களைவிட மட்டுக்கு மிஞ்சின சுறு சுறுப்பும், குடு குடுப்பும், வாய் துடி துடிப்பும், வாயலப்பும், முற்கோபமும் அதிகாரத்தன்மையும், தைரியமும், குறைகூறும் சுவாபமும், வெடுவெடுப்பு முடையவர்களாயிருக்கப் பார்க்கிறோம். சிலர் இதற்கு முற்றும் எதிரிடையாயிருக்கப் பார்க்கலாம். இவர்களெல்லாரும் கிறிஸ்துவின் அவயவமும் தேவனுடைய பிள்ளைகளும் பரலோக ராட்சியத்துக்குச் சுதந்தரவாளிகளுமான வட்டத்துக்குள் வசித்தாலும், திடப்படுத்தலைப்பெற்று பரிசுத்த நற்கருணைப்பந்தியில் சேர்ந்தவர்களாயிருந்தாலும் மரியாளைப்போல ரட்சகரை நேசிக்கவேண்டியபடி, நேசிக்கவேண்டிய அளவு நேசியாதவர்களும் இருக்கலாம் இப்படிப்பட்டவர்கள் புறம்பான விஷயங்களில் மாத்திரம் வைராக்கியமும் பக்திவினயமும் காட்டிப்போட்டு உள்ளான ஆவிக்குரிய விஷயங்களை முக்கியமாய் எண்ணாதே போகிறார்கள்.

---

இராகம் சங்கராபரணம். ரூபகம்.

பல்லவி. உத்தமிகள் இவர்கள்—ஏசையனை
மெத்தவும் நேசித்தார்கள்.

அ-வி. பத்து நெறிவழுவாமற் பரிசுத்த
பாதை யொழுகிநற் ஜீவியம் செய்துமே.

1. சிற்றூர் பெத்தானியாவில்—வசித்த
சீமான்கள் வீடுகளில்
சற்றேனும் ராத்தங்க தம்முள்ளெண்ணாரவர்
தம்மைப்போலேழைக் குடிசையில் தங்குவார் [—உத்.

2. தாகமிகுத்தவராய்—பிரயாண
சங்கடமுற்றவராய்
தேகக்களைப்புடன் போக நேரிட்டாலும்
தேடிவருவாரிவ் வேழைக்குடிசையை—உத்.

3 நாலாவிடமும் சென்று—பலருக்கு
நன்மைகள் செய்துகொண்டு
வேளா வேளையந்தப் பாதைவருகையில்
விரும்பிப்போவார் நலம் வினவிக்கொள்வார்
சுகம்—உத்.

இயேசு ரட்சகர் பெத்தானியாவுக்கு அடிக்கடி போய்வருகிறதுண்டு. இந்த சிறு குடும்பத்தை அவர் வெகுவாய் நேசித்தார் (பரி. யோ. 11: 5). தாம் பாடு படுவதற்கு முந்தின 3 நாட்களை அங்கே இவர்கள் வீட்டில் செலவிட்டார். பெத்தானியாவில் குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் அவர் ஒரு நாள் பந்தியிருக்கையில் இளைய சகோதரியாகிய மரியாள் நளதமென்னும் தைலத்தை அவர் பாதத்திலூற்றித் தன் தலை மயிரால் அதைத் துடைத்தாள். ஒரு குடும்பத்தில் புருஷன்

மனைவி பிள்ளைகளெல்லாரும் ஒன்றுபோல குடும்பமாய் ரட்சகராலே நேசிக்கப்பட்டால் அது எவ்வளவோ பாக்யம். இந்தப் பாக்கியத்தை நாம் குடும்பம் குடும்பமாய் பெற்றுக்கொள்ள பிரயாசப்படுவோமாக.

---

இராகம் பூரிகல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி. குருவேசு வொருநாளிவர்
குடிசை தங்கிடவே போனார்.

அநுபல்லவி. வரவேற்றுக்கொண்ட பின்னர்
வாகாய்விருந்தொன்று அவர்க்குச் செய்
தார்—குரு.

1. அக்காள் சமையல்வேலை புகுந்
தங்குமிங்கு மலையலுற்றாள்
அறுசுவை போஜன மளித்திடவே
அதிகச் சிரத்தை எடுத்துக்கொண்டாள்
பக்கத்திலே மரியாளோ
பணிசெய்யாம லுட்கார்ந்திருந்தாள்— குரு.

2 தங்கை மரியாள் சற்குருவின்
தாளினருகே அமர்ந்திருந்து
சத்தியபோதனை களைக்கேட்டு
தன்னுள் மிகுபரவசமடைந்தாள்
சிங்கம்போல் மார்த்தாள் சீறி
சினந்துபார்த்தாள் மரியாளையே— குரு.

நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு. மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லையென்று சொன்ன ரட்சகருக்கு இந்தக்

குடிசையில் தலைசாய்க்க சற்று இடம் கிடைத்தது. அத்தருணத்தில் மார்த்தாள் தனக்கு சமையல் வேலையில் உதவிசெய்யாமல் அவர் பாதத்தில் உட்கார்ந்திருந்த தன் சகோதரிமேல் கோபங்கொண்டு அவளை வாவென்று அதட்டிக் கூப்பிட மனமற்றவளாய் தன் வெடுவெடுப்பான சுவாபத்தை ரட்சகரிடத்தில் காட்டுகிறாள். இந்த நல்ல சகோதரிகளிருவரும் ரட்சகரை மிகவும் நேசித்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் நேசத்தைக் காட்டினவிதத்திலே வித்தியாசமிருந்தது. மார்த்தாள் அவருக்கு வாய்க்கு ருசியான போஜனம் சரிக்கட்டிக்கொடுத்து அவர் பசியை ஆற்றித் தன் நேசத்தை காண்பிக்கப் பிரயாசப்பட்டாள்.

மரியாளோ அவர் பாதத்தருகே உட்கார்ந்து அவர் அருள்பொழியும் வாயிலிருந்து பிறக்கும் அமிர்த வசனத்தைக்கேட்டுக் கவனித்துக் கற்றறிந்துகொள்ளவும் அவரை நேசிக்கவும் சேவிக்கவும் தன்னை அவருக்கு ஒப்புவிக்கவும் பிரயாசப்பட்டாள்.

சகோதரரே! ரட்சகர்பேரிலுள்ள நமது அன்பை நாம் எப்படிக் காட்டுகிறோம்? நம்மில் மார்த்தாளைப் போல வெளியன்பைக் காட்டுகிறவர்களும், மரியாளைப் போல உள்ளன்பைக் காட்டுகிறவர்களுமிருக்கலாமே. வெளியன்பின் கிரியைகள் என்ன? கிறிஸ்துநாதருடைய பிறப்பின் பண்டிகை, உயிர்த்தெழுந்த பண்டிகைகள் வந்துவிட்டால் வரிகள் போடுவதும் அதைப் பிரிப்பதும் ஆலயத்தை வெள்ளையடித்து வாழைகளாலும், மாலைகளாலும், தென்னோலைகளாலும், பூக்களாலும், புஷ்பாதிகளாலும், எழுத்துக்களாலும், வெளிப்பந்தல்

களாலும், லாந்தல்களாலும், பவர்விளக்குகளாலும் அலங்கரிப்பதும், வெடிகள் தீர்ப்பதும், வாணங்கள் கொளுத்துவதும், தம்பூர், பான்று வாத்தியங்கள் கூட்டுவதும், இன்னும் இவைபோன்ற மற்றும் அலங்காரங்கள் செய்வதுமே. இவைகள் வேண்டாமென்று நான் சொல்லுகிறதில்லை. இவைகள் ரட்சகருக்குப் பிரியந்தான். அவைகளை மாத்திரம் குடுகுடுவென்றோடி செய்வதும், ராமுழுதும் விழித்திருந்து நடப்பிப்பதும், தங்களோடு சேர்ந்து ஜோடிப்பு அலுவல்களை செய்யாதவர்களை கடிந்து, கோபித்து, அதிகாரம் பாராட்டி எதிர்வாதம் செய்து குடித்து, வெறித்து, சீட்டாடி, ஊஞ்சலாடி வெறும்பண்டிகை கொண்டாடுவதும் போதாது. பண்டிகை ஆராதனையில் சேர்ந்து வணங்கி நற்போதனைகளைக் கேட்பதும், பரி. நற்கருணையில் பங்கு பெற்று ரட்சகரோடு தங்கள் ஆத்துமாவின் ஐக்கியத்தைக் காத்துக்கொள்வதும் அவரை நேசித்து சேவிப்பதைத் தங்கள் கிரியைகளால் காண்பிப்பதுமே உள்ளான ஜீவியத்துக்கடுத்த பக்திவினயமான குறிப்புகளாம். மார்த்தாள் பருப்புப்போன்ற முக்கியமானதை அலட்சியம்செய்து தோடும் நோலும் சிரட்டையும் போன்ற வெளி மூடிகளைப்பற்றி அதிக சிரத்தையாயிருந்தாள். 'மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்' என்று (1 சாமு. 16: 7)-ல் சொல்லியிருக்கிறபடி மார்த்தாள் கவலை காணப்பட்டது. ஆனால் மரியாளிடத்தில் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணம் காணப்பட்டது. (1 பே. 3: 4).

3. தங்கை மரியாள் தனக்குதவி
சற்றும் செய்யாதிருக்கக்கண்டு

சைகை ஜாடை பலதடவை
தானே காட்டி சடைந்தபின்பு
நங்கை மார்த்தாள் முனிந்து
நல்லரபியைப்பார்த்துச் சொல்வாள்-குருவேசு.

---

## கண்ணிகள்.

1. ஆண்டவரே நான் ஒண்டியாய்—படும்
பாடுகளைப்பற்றி கவையில்லையா?
அற்ப சொற்ப உதவிசெய்ய—மரி
யாளேயிங் கனுப்பிட மனதில்லையா?

2. ரண்டுபேரும் சேர்ந்து செய்தால்—கோடி
ஒன்றுக்குள் போஜனமாகிடுமே
பெண்டுதானு இவள் மரியாள்—நீர்
கண்டும் கண் சாடையாயிருக்கிறீரோ.

3. தயவுசெய்து அவளை யிங்கே—நீர்
சட்டென்றுவரச் சொல்லும் சற்குருவே
தியங்குகிறேன் அலுவல் மிஞ்சி—தனித்
தெத்தனை வேலையை நான் செய்குவேன்.

மார்த்தாள் தன்னைப்போலவே ரட்சகரும் மரியாள் கவலையீனமாயிருக்கிறதாக எண்ணிக்கொள்வாரென்று நினைத்தாள். மரியாளே! நீ ஏன் இங்கே சோம்பேறித்தனமாயிருக்கிறுய்? உன் சகோதரிக்குப் போய் உதவிசெய் என்று துரத்துவார் என்று எண்ணிஞள். ஆனுல் ரட்சகரோ அதற்கு முற்றும் எதிரிடையாய் மார்த்தாளையே கடிந்துகொண்டார்.

---

## ரட்சகர் மறுமொழி.

இராகம். முத்துசெறி என்ற வர்ணமெட்டு. ஆதிதாளம்.

ப-வி. மார்த்தாளே மார்த்தாளே
மனவெறுப்பைக் காட்டாதே.

அ-ப-வி. பார்த்தேனுன் அலுவல்களை
பலகவலைகளால் கலங்குகிறாய் —மார்த்.

1. தேவையானது வொன்றே
தெரிந்துகொண்டாள் தங்கையின்றே
அவனுடன் நீயுமதை
ஆகப்பண்ண வகைதேடு —மார்த்.

2. அழிந்து போகும் போஜனத்தின்
மேல் கவலைவையாதே
அழியாத போஜனத்தை
ஆதாயப் படுத்திடப்பார் —மார்த்.

3. என் பசிக்கு உணவு சரிக்
கட்டுகிறாய் அது சரிதான்
உன்னாத்ம பசிக்குணவு
உண்டு என்னில் அதை உணர்வாய் —மார்த்.

4. முந்தி தேவனுடை ராட்சியத்
தையுமதின் நீதியையும் தேடு
பிந்திமற்றும் நன்மையெல்லாம்
பின்தொடர்ந்து வருமுனக்கு —மார்த்.

5. மரியாளோ தன்னைவிட்டு
எடுபடாத நல்லபங்கை
தெரிந்துகொண்டாள் ஜாக்கிரதை
தேடிடு நீயது வேரடிடுமுன் —மார்த்.

பிரியமானவர்களே! இந்த சரித்திரத்திலிருந்து மரியாள் தேடிக்கொண்ட நல்ல பங்கைப்பற்றி சில போதனைகள் சொல்ல விரும்புகிறேன். மரியாள் தெரிந்துகொண்ட நல்ல பங்காவது என்ன? "ஏசுரட்சகரைத்தன் எதிரில் நிறுத்தி, இன்பசுகந்தருமவர் சமுகத்தை நோக்கி, பண்புறும் பரமபோதனைகளைக் கேட்டு, பரவசமடைந்தவர் பாதத்தை முத்தி, பட்சமாய் நேசித்துச் சேவித்துப்போற்றி, பரமானந்தக் கடலிலே மூழ்கி, பக்கம் பிரியாதபடி தன் மனதை யடக்கி அவரைப்பற்றிப் பிடித்துக்கொண்டதேயாம்.

---

இராகம் ஆரபி. ரூபகம்.

ப-வி. ஏசுக்கிறிஸ்துவை நேசித்துச்சேவிப்ப
தேமாசிறந்த பங்காம்.

அ-ப-வி. மாசணுகா தேவ மைந்தன் சமுகமே
மாசந் தோஷந்தருமே —ஏசுக்.

---

இராகம் சாவேரி. ஆதிதாளம்.

ப-வி. ஏசுரட்சகரை நேசித்துச்சேவித்தல்
எல்லாப்பங்கிலும் நல்ல பங்காம்.

அ-ப-வி. நேசகுமாரனென்றே பிதா கூறிய
நிர்மலன் பொற்கழலைப்பணிந்து —ஏசு.

பிரியமான பிள்ளைகளே, வாலிபரே, பெரியோரே மரியாள் தெரிந்துகொண்ட நல்ல பங்கு 'ஏசுரட்சகரை நேசிப்பதும் சேவிப்பதுமே'. இந்தப்பங்கு ஏன்? எப்படி? நல்ல பங்கு என்பதற்கு 4 முகாந்தரங்கள் சொல்லுவேன்.

---

1. இது தேவனுக்குப் பிரியமானது.
ஆகையால் நல்லபங்கு.

இராகம் கமாசு. ஆதிதாளம்

ப-வி. தேவ பார்வையிலே—இதுவே
சீரான நற்பங்கு;

சரணம்.

தேவ பார்வையிலே நல்ல பங்கு
தினமுமவர் திருச்சமுகத்தில் தங்கு
பாவ வியாதிகள் பறந்திடுமங்கு
பார் பார் பார் பார் பார்—தேவ.

தமது நேச குமாரனாகிய ஏசுக்கிறிஸ்துவை நாம் நேசிப்பதும் சேவிப்பதும் பிதாவாகிய தேவனுக்குப் பிரியம். அவர் மறுரூபம் அடைந்தபோது பிதாவாகிய தேவன் "இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள்" என்று உரைத்தார். (மத். 17: 5).

ஆதியில் தேவன் சிருஷ்டித்த தேவதூதர்கள் தம்மை நேசிப்பதும் சேவிப்பதுமே அவருக்குப் பிரியமாயிருந்தது. தம்மை நேசித்து சேவியாமல் பெருமை கொண்ட தூதர்களை கீழே உதைத்துத்தள்ளினார். (யூதா. 1: 7).

ஆதி மனுஷர் இந்த நோக்கத்துக்காகவே சிருஷ்டிக்கப்பட்டு ஏதேன் தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அவருடைய நோக்கத்துக்கு விரோதமாய் நடந்தபோது 'இன்பம்' என்றர்த்தமுள்ள ஏதேனின் சலாக்கியத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டார்கள். (ஆதி. 3: 23, 24).

---

கப்பற்றரு.

தேவ பார்வையில் இது நல்ல பங்கு
தேவ தூதர்க்கு அளித்திட்ட பங்கு
ஆதிமனுடர்க்குக் கிடைத்த நற்பங்கு
அவர்களும் தூதரும் இழந்திட்ட பங்கு
கோத்திரப் பிதாக்கள் எதிர்பார்த்த பங்கு
கொலைகார யூதர்க்குக்கிடையாத பங்கு
தீர்க்கதரிசிகள் உரைத்திட்ட பங்கு
சீடர் அப்போஸ்தலர் தெரிந்திட்ட பங்கு
குற்றமற்ற ரத்தச்சாட்சிகள் பங்கு
குணப்பட்ட கள்ளன் அடைந்திட்ட பங்கு

அன்பன் பரி. யோவான் அனுபோகப்பங்கு
அந்தரங்க சீடன் நிக்கோதேம் பங்கு
கேரூபின் சேராபீன் சேவிக்கும் பங்கு
கிலே யோப்பா மகதலீன் மரியாள்கள் பங்கு
உலகமெங்குமுள்ள பரிசுத்தவான்கள்
உனக்கு எனக்கென்று வாதாடும் பங்கு.

முடுகு

இந்த நல்ல பங்கை மரியாள் தெரிந்தாள்
ஏனோதானோவென்று மார்த்தாளிருந்தாள்.
பிள்ளைகளே இந்த நல்ல—பங்கை
பெற்றுக்கொள்ள வகை பாருங்கள்.
பெரியோர்களே இந்த நல்ல—பங்கை
பெற்றுக்கொள்ள வகை பாருங்கள்.

---

**2.** நமது ஆத்துமாவை திருப்தி செய்யத்தக்க பங்கு. ஆகையால் இது எல்லாவற்றிலும் நல்ல பங்கு.

**இராகம் எதுகுல காம்போதி.** **ஆதிதாளம்.**

ப-வி. ஆத்துமாவுக்குத் திருப்திதரும் பங்கு
ஆகையால் நல்ல பங்கு.

அ-ப-வி. ஆத்துமாவுக்கு அநேக நாளைக்கு
ஏற்ற போஜனமளித்து மறுமைக்கு
சேர்த்து நித்திய ஜீவமகிமைக்கு
திறமுடனனுதினம் நடத்திடுமாம் இது
—ஆத்து.

உலகத்திலே அனேகர் சந்தோஷமற்றிருப்பதற்குக் காரணம் அவர்கள் மனதைத் திர்ப்தி செய்யும் காரியங்கள் கிடையாததினாலே தான். திருஷ்டாந்தமாக.

1. நடுக்காட்டில் கொடிய பசியினால் வருந்தும் ஓர் பையனுக்கு அல்லது தாகத்தினால் நாவரண்டு சுருண்டு விழுந்து கிடக்கும் ஒருவனுக்கு பசிக்கு ஆகாரமாவது தாகத்துக்குத் தண்ணீராவது கொடாமல் பவுனாவது ரூபாயாவது துட்டாவது நீட்டிக் கொடுத்தால் அது அவனுக்குத் திருப்தி செய்யுமா?

2. கிணற்றிலே தவறிவிழுந்த ஓர் பையனுக்கு அவன் தண்ணீரில் மூழ்கி இறந்து போகாதபடி உடனே கயிறுபோட்டு கப்பிமாட்டி அவனைத்தூக்கி எடுப்பதற்குப் பதிலாக நேர்த்தியான ஒரு கட்டிலும் சமுக்காளமும் தலையணையும் கொண்டுபோய் கிணற்றண்டை வைத்துக்கொண்டு பையா! நீ தண்ணீரில் தப்பட்டமடியாதே. இந்த கட்டிலில் வந்து படுத்துக்கொள். தலையணைமேல் தலைவைத்துக்கொள் என்று கூவிக்கொண்டிருந்தால் அந்தப் பையனுக்குத் திர்ப்தியாயிருக்குமா? அது அவனை சந்தோஷப்படுத்துமா?

3. அல்லது கடுஞ்சுரம் கண்டு ஜன்னி உபத்திரவத்திலிருக்கும் ஒரு மனுஷனுக்கு எற்ற அவிழ்தம் கொடுப்பதற்குப் பதிலாக நேர்த்தியான பண்ட பலகாரங்களையும் கொழுத்த இறைச்சியையும் கொண்டு

கொடுத்தால் அது அவனுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்குமா? மனத்திருப்தியைக் கொடுக்குமா? கொடாதே. அப்படிப்போல ஆத்துமாவுக்கு சிற்றின்ப ஆசை யிச்சைகளும் இந்தப் பொல்லாத லோகத்தின் ஆடம்பரமும் பாவமான மாம்ச விச்சைகளும் மனத்திருப்தியைக் கொடுக்கமாட்டாது. இயேசு ரட்சகரை நேசிப்பதும் சேவிப்பதுமாகிய நல்ல பங்கே ஆத்துமாவைத் திருப்தி செய்யத்தக்கது.

---

ஆதிதாளம்.

ப-வி. ஆத்துமாவுக்குத் திருப்திதரும் பங்கு
மரியாள் பெறு பங்கு.

அ-ப-வி. ஆத்துமாவுக்கு சதாகாலத்துக்கு
ஏற்ற போஜனமளித்து மறுமைக்கு
சேர்த்து நித்திய ஜீவமகிமைக்கு
தினமுமுனை வழிநடத்திடுமாம் இது
—ஆத்து.

நான் உங்களைப்பார்த்து ஒரு கேள்வி கேட்கிறேன். அதாவது ஒரு மிருகத்துக்கு எவ்வளவு ஆகாரம்போதும், எவ்வளவு ஆகாரம் கொடுத்தால் அதற்குத் திர்ப்தியாயிருக்குமென்பதே. அதற்கு உத்தரவாக நீங்கள் அந்த மிருகம் எவ்வளவு பெரிதென்று

சொன்னால் அதற்கு திர்ப்தி செய்யத்தக்க ஆகாரம் இவ்வளவென்று சொல்லுவோம் என்று சொல்லுவீர்கள். அது சரியான உத்தரவுதான். அதே விதமான இன்னொரு கேள்விகேட்கிறேன். ஆத்துமாவுக்கு திருப்தி தரக்கூடிய நல்ல பங்கு எவ்வளவு பெரிதாயிருக்கும். அதற்கு உத்தரவாக நீங்கள் ஆத்துமாவின் பருமன் தெரியுமானால் அதைத்திருப்தி செய்யத்தக்க பொருள் எவ்வளவு பெரிதாயிருக்குமென்று சொல்லக் கூடுமென்பீர்கள்.

சகோதரரே! சகோதரிகளே நமது சரீரங்கள் எவ்வளவு பருமனென்பதை, எவ்வளவு பெரியது என்பதை அளந்து பிடித்துத் தூக்கிச்சொல்லிப்போடலாம். ஆனால் ஆத்துமா ஆவிவஸ்தாகையால் அதைப் பார்த்துப் பிடித்துத்தூக்கிச் சொல்லமுடியாது. என்றாலும் ஆத்துமா எவ்வளவு பெரிதென்பதை சொல்லிப் போட வழியுண்டா? ஆம், வழியுண்டு. அதெப்படி? நமது ஆத்துமாவைத்திருப்தி செய்யத்தக்கதும் சந்தோஷிப்பிக்கத்தக்கதுமான காரியத்தைக்கொண்டு நமது ஆத்துமா எவ்வளவோ பெரியது எவ்வளவோ விசேஷித்தது என்று அறிந்து கொள்ளலாம். ஒரு நிமிஷம், ஒரு மணிநேரம், ஒரு நாள், ஒரு மாசம் ஒரு வருஷம் மாத்திரம் ஆத்துமாவைத் திருப்தி செய்யத்தக்க பொருளைக்கொண்டல்ல சதா நித்தியகாலமாய் அதைத்திருப்தி செய்யத்தக்க பொருளைக்கொண்டே

ஆத்துமாவின் பெருமையும் அதன் மேன்மையையும் அதன் முக்கியத்தையும் அளந்து போடலாம்

இராகம் லாவணி.

1. உலக முழுவதையும் பதில் கொடுத்தாலும்
உன் ஆத்துமாவுக்குத் திருப்தி தராதே
அவ்வளவு பெரிதே.

2. பவுண்கள் ரூபாய்கள் பாங்கிநோட்டுகளும்
பலரத்னுதிகளுமே திருப்தி செய்யாதே
அவ்வளவு பெரிதே.

3. மனந்திரும்பிடு மொருவாத்துமா நிமித்தம்
வான்தூதசேனை கொண்டாடுமானந்தம்
அவ்வளவு பெரிதே.

ஆத்துமாவுக்குத் திருப்திதரும் பங்கு
ஆகையால் நல்ல பங்கு.

3. இது நிச்சயமான பங்கு. ஆகையால் நல்ல பங்கு.

இராகம் காவடிச்சிந்து. ஆதிதாளம்.

ப-வி. உத்தமி மரியாள் பெற்றுக்கொண்ட பங்கு
நிச்சயமான பங்காம்—வானோர்களும்
இச்சிக்கத்தக்க பங்காம்—சாத்தானுக்கு
அச்சங்கொடுக்கும் பங்காம்—இதை.

அ-ப-வி. பெற்றுக்கொள்ள வைத்துக்கொள்ள
பேணிக்கொள்ள வாசித்திடும்
பிள்ளைகளே நல்லபிள்ளைகளாம்—இதை
பெற்றுக்கொள்ள வைத்துக்கொள்ள
பேணிக்கொள்ள வாசித்திடும்
பெண்டுகளே நல்ல பெண்டுகளாம்—உத்தமி.

ஒரு ஏழை மனிதன் ஒருநாள் தெருத்திண்ணை ஒன்றில் படுத்திருக்கும்போது ஒரு ஆள் தனக்கு ரூ. 100 வெகுமானம் கொடுத்தது போலவும் அதைத் தன் பெட்டிக்குள் பூட்டி வைத்திருப்பது போலவும் தரிசனங்கண்டு அதிகாலையில் தன் உடைந்த பெட்டியைத் திறந்து அதைத் தேடிப்பார்த்தான். அதிலே ஒன்றும் காணவில்லை. அவன் ஏமாந்து போனான். ஏனென்றால் அவன் கண்டது நிச்சயமாய் 100 ரூபாயல்ல, மாயாதோற்றமே.

பாலைவனமொன்றிலே சில மான்கள் மேய்ந்து கொண்டு நின்றன. வெயிலேற ஏற அவைகள் தாகத்தால் நாவறண்டு நீரோடைகள் எங்கேனும் கிடையாதாவென அங்குமிங்கு மோடிப்போய் பார்த்தன. நீரோடைகள் கிட்டவில்லை. தாகத்தின் அகோரம் தாங்கக்கூடாமல் கதறின. கடைசியாகத் தூரத்தில் எறிட்டுப் பார்க்கவே தண்ணீர் நின்றசைவதுபோலவும் ஓடுவதுபோலவும் ஓர் காட்சி காணப்பட்டது. உடனே

மான்கள் அந்த திசையை நோக்கி விரைவாய் ஓடின. ஆனால் அவைகள் எண்ணிக்கொண்ட நீரோடை நிச்சயமான நீரோடையல்ல. மாயா தோற்றமான நீரோடை. வெயிலின் அகோரத்தால் அசைந்து காணப்பட்ட கானல். ஐயோ! ஏழைப் பிராணிகளான மான்கள் ஏயாந்து திரும்பின. கதறிப்புலம்பின.

ஆனால் மரியாள் ஓடித் தேடிக் கண்டுகொண்ட பங்கோ அப்படி மாயா தோற்றமான அநிச்சயமான பங்கல்ல. அவள் முகமுகமாய் தரிசித்த யேசுரட்சகருடைய சமுகமே அந்த நிச்சயமான பங்கு. அவள் ருசித்த அவருடைய அன்பே அந்த நிச்சயமான பங்கு.

---

இராகம் ஆனந்த பைரவி. ஆதிதாளம்.

ப-வி. மரியாள் தெரிந்தெடுத்த பங்கொன்றே
நிச்சயமான பங்காம்.

அ-ப-வி. மறுபங்கெதுவெனினும் அ
நிச்சயமான பங்காம்— மரி.

---

## 4. இது என்றைக்கும் நிலைத்திருக்கும் பங்கு

ஆகையால் நல்ல பங்கு.

இராகம் பரசு. ஆதிதாளம்.

ப-வி. இந்த நல்ல பங்கு நிலை
யான பங்கு நேசமே
நேசமே, நேசமே, நேசமே, நேசமே.

மற்ற எந்தப் பங்கும் நிலே
யற்ற பங்கு நேசரே
நேசரே, நேசரே, நேசரே, நேசரே.

(1) பூலோகத்தின் வாழ்வு நிலேயற்றது.

முகாரி. ரூபகதாளம்.

சதமல்ல இந்நில வாழ்வு இதை
தஞ்சமென்றாசிக்கில் தாழ்வு— இன்றே.

ப-வி. பரலோக நாட்டத்தை நாடு—ஈர
லோகத்தை நீ விட்டுப்போடு

(2) ஆயுள், ஜீவன் நிலேயற்றது.

இராகம் கரகரப்பிரியா. ரூபகம்.

புகைபோல் பறக்குதே புகலற்ற வாணள்
இகையா தேசுபதம் தேடிக்கொள்ளின்ஞள்.

ப-வி. ஆகா! பூலோக வாழ்வே அநித்யம்.

(3) ஜீவகாலம் நிலேயற்றது.

கதைபோல் வருஷங்கள் கழியுதே வீணுய்
அதை யோசித்துனது ஆத்துமம் பேணுய்—
ஆகா.

(4) உடல்மினுக்கு தேகவசீகரம் நிலேயற்றது.

ஆடையாபரணம் அழகு சௌந்திரியம்
கூட நாட் செல்லச்செல்லக் குறைந்துவிடும்
நிலேயாது, நிலேயாது, நிலேயாதையா.

உண்டு உரத்துப் பருத்திருக்கின்ற வுடலும்
பண்டி விழுந்த தேக பளபளப்பும்
நிலையாது, நிலையாது, நிலையாதையா.

---

(5) காசு பணம் நிலையற்றது.

இராகம் துசாவந்தி ரூபகம்.

ப-வி. செட்டைதட்டிப் பறந்திடுமே-காசும் பணமும்
செட்டைதட்டிப் பறந்திடுமே

அ-ப-வி. செட்டைதட்டிப் பறந்திடும்
செலவிடக் குறைந்திடும்
நட்டம் வந்தால் நடந்திடும்
நாணமும் பின் தொடர்ந்திடும்—செட்டை.

---

(6) கல்வியறிவு நிலையற்றது.

கல்வி சாஸ்திரங்கள் கற்ற கைத்தொழில்கள்
எல்லா மாறியே போகும் இது நிசமே.
நிலையாது, நிலையாது, நிலையாதையா.

ஆம்! "இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறது"
(1 கொரி. 7: 31.)

(சிங்காசனமேறிய ராஜன் கதை)

ஓர் காலத்தில் ஓர் இராஜன் தான் கிரீடம் தரிப்பிக்கப்பட்ட நாளில் தன் இராஜ்யமெங்கும் உத்தியோஸ்தர்களுக்கு லீவுகொடுத்து பெருமகிழ்ச்சியான கொண்டாட்டம் கொண்டாடினான். பிரபுக்கள் நேர்த்தியான உடுப்புகள் உடுத்தி கூடி வந்தார்கள். பட்டா

ளங்கள், சிப்பாய்கள், ராணுவ உத்தியோகஸ்தர், பற்பல நிற உடுப்புகள் மாட்டி வரிசை வரிசையாய் அரண்மனையைச் சுற்றி பவனி போனார்கள். பற்பல தாளராகங்கள் பட்டாளத்து (Baud) பான்றுகாரர் வாசித்தார்கள். இராஜன் இந்த காட்சியைப் பார்த்து சந்தோஷம் பொறுக்கமாட்டாமல் தன் அருகே நிற்பவர்களில் ஒருவனைப்பார்த்து "இது பூரண மகிமையாயிருக்கிறதல்லா" என்று கேட்டான். அதற்கவன் "மகாராஜாவே! பூரண மகிமைக்கு ஒன்று குறையாயிருக்கிறது" என்றான். அதென்னவென்று இராஜன் கேட்க "இது நீடித்திருக்குமா"? என்றான். இராஜன் "ஆம் நீடித்திராது; சகல காட்சியும் இன்னும் கொஞ்ச நேரத்தில் முடிந்துபோம்". என்றான். அப்படியே பட்டாளங்கள் தங்கள் தங்களிடங்களுக்குப் போயின. வாத்திய கோஷ்டம் நின்றது. பறந்த கொடிகள் சுருட்டப்பட்டு பிரபுக்கள், உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் தங்கள் வீடுகளுக்கு போய்விட்டார்கள். நேரம் இருட்டினது. இருள் பரவினது. ஆரவாரங்கள் நின்றது. எல்லாம் அமைதலாயிற்று. கொஞ்ச நேரத்துக்குள்ளாக இராஜா தான் கண்டது சொப்பனம் என்று நினைத்தான். ஆகவே ராஜன் அடைந்த பங்கு நிலையான பங்கல்ல. ஆனால் இயேசு ரட்சகரை நேசித்துச் சேவிப்பதாலுண்டாகும் ஆனந்தமோ என்றும் நிலையானது.

இராகம் முகாரி ஆதிதாளம்.

பல்லவி. நேற்றும் இன்றும் என்றும் மாறு
நேசுநாதர்காண்.

அநுபல்லவி. சாற்றரிய வேறு பொருள்
யாவும் மாறுந்திரான்.

ஆம்! இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபி. 13: 8). அவருடைய அன்பு மாறாதது. அவருடைய இரக்கம் மாறாதது. அவருடைய தயவு மாறாதது. அவருடைய பராமரிப்பு மாறாதது அவருடைய நீதி மாறாதது.

---

இராகம் பரசு. ஆதிதாளம்.

இந்த நல்ல பங்கு நிலை
யான பங்கு நேசரே
நேசரே, நேசரே, நேசரே, நேசரே.

மற்ற எந்தப் பங்கும் நிலை
யற்ற பங்கு நேசரே
நேசரே, நேசரே, நேசரே, நேசரே.

---

5. 'ஒருபோதும் எடுபடாத பங்கு'. ஆகையால் இது
நல்லபங்கு.

இயேசு ரட்சகரே 'எடுபடாத' என்ற அடைமொழியைக் கூட்டி சொல்லுகிறார்.

1. ஏதேன் தோட்டத்திலே குடியேற்றப்பட்ட நமது ஆதித்தாய் தந்தையரிடமிருந்து அவர்கள் மதியீனத்தினிமித்தம் ஞானம் பரிசுத்தம் பாக்கியம் சாவாமையாகிய சலாக்கியங்கள் எடுபட்டுப் போனது.

2. சவுலுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் ராஜ்யம் அவனைவிட்டு எடுபட்டுப்போனது. தேவ ஆவி அவனை விட்டு எடுபட்டு பொல்லாத ஆவி அவனைப்பிடித்து அலைக்களித்தது.

3. சாலமோனின் இருதயம் தேவனை விட்டுப் பின் வாங்கிப்போன தினிமித்தம் அவன் குமாரனாகிய ரெகோபேயாம் காலத்தில் ராஜ்யத்தில் 10 கோத்ரம் அவனை விட்டு எடுபட்டுப்போனது.

4. நேபுகாத் நேச்சாருடைய பெருமையினிமித்தம் அவனுடைய மனுஷ ரூபமும் புருஷலட்சணமும் எடுபட்டு அவன் மாட்டைப்போல் புல் மேய்ந்தான். ஆனால் இந்த நல்ல பங்கோ அப்படி எடுபடக்கூடியதல்ல

---

பியாகு ஆதிதாளம்.

ப-வி. எடுபடாத பங்கிது இதை
விடவே விடக்கூடாது—ஒருபோதும்
விடக்கூடாது.

சரணம். 1. தாமிதமாகாது—அணுவளவும்
சாக்குப்போக்குதவாது
சரியாகாது பின்பு ஏலாது— ஆமாம்.

2. சதா காலமுமிருப்பார்—பக்தரகமே
சந்தோஷமாக வசிப்பார்
புசித்துக்குடிப்பார்
பிரகாசிப்பிப்பார்— ஆமாம்.

"இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்பது அவர் வாக்கு (மத். 28: 20.)

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ துன்பமோ பசியோ நிர்வாணமோ நாசமோ சமோ, பட்டயமோ இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப்பிரிக்கமாட்டாது (ரோமர். 8: 36-39).

---

படிப்பினை.

இராகம் ஆனந்தபைரவி ஆதிதாளம்.

ப-வி. ஏசுரட்சா பெருமான்
எப்போதும் நம் நல்ல பங்காம்.

அ-ப-வி. காசினி தனிலே கவலைமொய்க்கையிலே
உலகமாய் கையிலே உழன்றுநைகையிலே
—ஏசு.

2. உத்தமிமரியாள் தன்னைப்பின்பற்று
உலகசிந்தனைக ளனைத்தையும்விட்டு —ஏசு

3. மார்க்க வைராக்கிய யோக்யதாபந்த
மானமுயற்சி மாத்திரம் வீணும் —ஏசு.

4. வெளிவேஷ பக்தி முறுக்கு குலுக்கு
மேலாங்கார சடங்குகள் வீணும் —ஏசு.

5. இருதயப்படைப்பு உணவிலும் சிறப்பு
அரை குறை படைப்பு அவர்க்குதவாது —ஏசு.

---

சங்காபரணம் ஆதிதாளம்.

1. மங்களம் மங்களமே
மாபிதாவானவர்க்கே
சங்கைமிகும் கனமே
சருவவியாபகர்க்கே.

2. மங்களம் மங்களமே
மாநேச குமாரனுக்கே
எங்கும் துதிதினமே
இரட்சகராமவர்க்கே.

3. மங்களம் மங்களமே
மாபரிசுத்தாவிக்கே
சிங்காரப் பண்ணுடனே
தேற்றரவாளனுக்கே.

4. மங்களம் மங்களமே
மாதிரியேகருக்கே
பொங்கும் புகழ் என்றுமே
பூதல மிசையெங்குமே.

5. மாது சிரோமணிகள்
மார்க்காள் மரியாளின்
காதை யிதைக்கருத்தாய்
கற்பவர் வாழி வாழி.

டார்லிங் பிரஸ், பாளையங்கோட்டை—1920.

# அறிவிப்பு.

அடியிற்கண்ட புஸ்தகங்கள் எளிதில் பாடக்கூடிய நேர்த்தியான ராகங்களில் அமைக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது.

1. நல்ல சமாரித்தன் உவமை. விலை அணு 2.
2. அர்த்தராத்திரி அப்பங்கேட்டோன் விலை அணு 2.
3. மதிகேடனான ஐசுவரியவான் விலை அணு 3.
4. மார்த்தாள் மரியாள் கனிதை விலை அணு 3.